உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள நிகழ்வுகளின் நவீன முறையில் வீடியோ படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வீடியோ கமரா, T.V. வீடியோ டெக் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 20 புதன்கிழமை (02 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 67

# புதிதாகப் பாரிய தாக்குதல்களுக்கு இராணுவம் தயாராகி வருகிறது!

## கிழக்குத் தேர்தல்களை முன்னிட்டு அரசு ஏற்பாடாம்

கொழும்பு, பெப்ரவரி 2

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களை முன்னிட்டு —

அந்தத் தேர்தல்களை விடுதலைப் புலிகள் குழப்பாமல் செய்வதற்காக — அவர்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் — பாரிய தாக்குதல் ஒன்றுக்கு இராணுவம் தயாராகி வருவதாக அறிவிக்கப்படுகிறது,

கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களைக் குழப்பும் வகையில் விடுதலைப் புலிகள் புதிய தாக்குதல்களைத் தொடங்கக் கூடும் என்றும் —

எனவே மழைக் காலம் முடிவடைந்திருப்பதால் இராணுவம் புதிய பாரிய தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் —

இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக ''வெரித்தாஸ்'' வானொலி அறிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், பெப். 2

மண்டைதீவு – கல்முனைக் கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்றுக்காலை 6 மணிக்கு கடற்படையினர் கடுமையான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடலில் மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற மீனவர்களை நோக்கியே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதனை அடுத்து மீனவர் அவசர அவசரமாகக் கரைக்குத் திரும்பினர். (உ-15)

## குடாநாட்டுக்கு ஆளுநர் லயனல் வருவாராம்

கொழும்பு, பெப். 2

யாழ். குடாநாட்டில் உள்ள அகதிகளைச் சந்திப்பதற்காக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ விரைவில் அங்கு விஜயம் செய்யவிருப்பதாக கொழும்பு சிங்களப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-6]

## தமிழர் கைது

மட்டக்களப்பு, பெப். 2

மட்டக்களப்பு பாவற்கொடிச்சேனையில் வயல் காவலில் ஈடுபட்டிருந்த ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான வடிவேல்(வயது 38) என்ற தமிழரே கைது செய்யப்பட்டவராவார்.

அவரது உறவினர்கள் முகாம் சென்று விசாரித்த போது அவ்வாறான ஒருவரை தாம் கைது செய்யவில்லை என்று படையினர் பதிலளித்தனராம். (உ-த)

## மெதடிஸ்த குழு கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, பெப் 02

மெதடிஸ்த திருச்சபையை சேர்ந்த மதகுருமார் குழு ஒன்று கிளிநொச்சிக்கு வந்துள்ளது. இக்குழு யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் மேற்கொள்ளும்.

ஸ்ரீலங்காவின் பல பகுதிகளில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் திருச்சபையின் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

குழுவினர் கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் படையினர் மேற் கொண்ட அழிவு வேலைகளைப் பார்வையிடுவதுடன் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்திப்பர்.

இக்குழு கடந்த நவம்பர் மாதம் யாழ்ப்பாணம் வர முயற்சித்த வேளை அவர்களுக்கு அனுமதி வழங்க கூட்டுப்படைத் தலைமையகம் மறுப்புத் தெரிவித்திருந்தது நினைத் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், பெப். 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதல் ஒன்றில் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

இரண்டாம் லெப்ரினன்ட் நெடியோன் (கோவிந்தன் கேதீஸ்வரன் — முத்தையன் கட்டு முல்லைத்தீவு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். (உ-த)

## மூன்று ஆண்டு காலத்தில் 5 ஆயிரம் படையினர் பலி!

கொழும்பு, பெப். 2

1991 ஆம் ஆண்டு முதல் 1993 வரையான காலப் பகுதியில் 3 ஆயிரத்து 683 படையினர் போரில் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

1991 இல் 1,211 படையினரும், 1992 இல் 1,135 படையினரும், 1993 நவம்பர் 11 வரை 1,337 படையினரும் கொல்லப்பட்டனர்.

1990 இல் இறந்த படையினரின் எண்ணிக்கையை பாதுகாப்பு அமைச்சு வெளியிடவில்லை.

1990 ஜூன் முதல் டிசம்பர் வரை கோட்டை, கொக்காவில், மாங்குளம் ஆகிய முகாம்களை பலத்த உயிரிழப்புகளுடன் இராணுவம் பறிகொடுத்தது என்ற விவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அரச உயர் மட்டத்துடன் பேசிய பின்

## வடக்கு விஜயத்தை இன்று ஆயர் கெனத் ஆரம்பிக்கிறார்

யாழ்ப்பாணம், பெப் 2

இன்று முதல் வடக்கில் விஜயத்தை மேற்கொள்ளும் அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ, அதற்கு முன்னர் கடந்த வாரம் அரச மற்றும் பாதுகாப்பு உயர் மட்டத்தினருடன் பேச்சுக்கள் நடத்தியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆயருடன் அவரது துணைவியார் சித்திரா பெர்னாண்டோ மற்றும் அருட்திரு ரியான்சி பெரேரா, அருட்திரு டொனால் கனகரத்தினம் ஆகியோர் இன்று கிளிநொச்சிக்கு வரவிருப்பதாகவும் —

அங்கு மத வைபவங்கள் பலவற்றில் அவர்கள் பங்கேற்ற பின்னர், அநுராதபுரத்துக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி செல்வர் என்றும் —

அங்கிருந்து விமான மூலம் பலாலி வந்து சேர்வர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஆயர் தாம் யாழ்ப்பாணம் வரும் போது தம்முடன் பௌத்தபீடத்தின் உயர் மட்டத்தைச் சேர்ந்த இரு பௌத்த பிக்குகளையும் அழைத்துவர முயற்சி எடுத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச பிரதிநிதிகள் வடக்கே வருவதற்கு அரசு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் ராஜதந்திரிகளும், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் யாழ். வந்து குடாநாட்டு மக்களுக்கு உதவ ஆவலாக உள்ளனர்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு அனுமதி வழங்காததால் அவர்களால் இங்கு வர முடியவில்லை.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த சர்வதேச அமைப்பின் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமது அமைப்பின் அலுவலகம் இயங்குவதால் தாம் யாழ் வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியதாகவும் —

இங்குள்ள மக்களின் இன்னல்கள், கஷ்டங்கள் குறித்து கொழும்பு திரும்பியதும் விசேட கூட்டம் நடத்தி அவர்களுக்குத் தாம் விளக்க விருப்பதாகவும் — அவர் மேலும் கூறினார்.

இங்குள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க பல சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் தயா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளை பரிமாற்றம் செய்ய அரசாங்கத்துக்கு ஆலோசனை

### காணாமற்போன படையினரின் பெற்றோர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 2

தற்போது புலிகளால் வடக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படையினர் ஒவ்வொருவரையும் விடுவிப்பதற்காக ஸ்ரீலங்காப் படையினரால் தடுத்து வைக்கப்பட்ட தமிழ்க் கைதிகளில் இருவர் என்ற அடிப்படையில் விடுவிக்க வேண்டும்.

—இவ்வாறு அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

காணாமற்போனதாகக் கருதப்படும் படையினரின் பெற்றோர்களே இத்[illegible] ஆலோசனையை [illegible]கிறார்கள்.

அண்மையில் பருத்தித்துறைக் கடலில் வைத்து சுப்பர் டோறா — 464'' கப்பல் தகர்க்கப்பட்டபோதும் —

பூநகரித் தாக்குதலின்போதும் —

காணாமற்போனதாகக் கரு[illegible] [illegible]றோர்கள், சங்கம் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 2

கிளாலிப் பகுதியில் நேற்று முன் தினம் காலை ஹெலிக்கொப்டர் ஒன்று 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

மீன்பிடித்த பின்னர் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்த படகுகளை நோக்கியே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை —

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் ஆனையிறவு முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கடற் பகுதியில் விழுந்து வெடித்தன. (உ-த-117)

## 3000 அடையாள அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் மூவாயிரம் பேரின் அடையாள அட்டைகள் யாழ் ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

கொழும்பில் இருந்து வந்து சேர்ந்த அடையாள அட்டைகளை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. (அ-100)

## பேச்சு மூலம் தீர்வுகாண வலியுறுத்து

புதுடில்லி, பெப். 2

இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு முயலவேண்டும் என்று நேற்று வாஷிங்டனில் அமெரிக்க அரசியல் பிரமுகர்கள் குழு ஒன்றின் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் கோரப்பட்டதாக செய்தி ஏஜென்சி ஒன்று அறிவித்தது.

நிலைமை சுமுகமடையாத நிலையில் ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் முயற்சியில் இந்தியா ஈடுபடக் கூடாது என்றும் கோரப்பட்டது. (உ:9)

## பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, பெப் 2

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலை வழக்கில் முதலாவது சந்தேகநபர் உட்பட நான்கு பேரை நான்கு நிபந்தனைகளின் மீது பிணையில் செல்ல கொழும்பு நீதிவான் அனுமதித்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்று அறிவித்தது.

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டோரின் மேலதிக விபரம் குறித்தோ அல்லது அவர்களுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனை குறித்தோ எதுவும் அறிவிக்கப்படவில்லை. (உ-எ-6)

### முச்சந்தி முனி



அப்ப...... கைக்கு எட்டினது வாய்க்கு எட்டயில்லை என்ட மாதிரித்தான் ......!

## அரிசியிலிருந்து வைன்! தயாரிப்பு முயற்சி வெற்றி!!

### சோளத்திலிருந்து திரவ குளுக்கோஸ்

யாழ்ப்பாணம், பெப். 2

அரிசியில் இருந்து வைன் தயாரிக்கும் யாழ். மருத்துவ பீடத்தின் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் இத்தகவலை வெளியிட்டார்.

இதேபோன்று —

அரிசி, சோளம் ஆகியவற்றில் இருந்து திரவ குளுக்கோஸ் தயாரிக்கும் பரீட்சார்த்த முயற்சியும் வெற்றியளித்திருப்பதாகவும் —

இதனைப் பெருமளவில் தயாரிக்கும் முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் எதிர்வரும் புத்தாண்டில் சந்தைக்கு திரவ குளுக்கோஸ் அறிமுகமாகும் என்றும் — அவர் தெரிவித்தார்.

காலக்கிரமத்தில் அரிசியில் இருந்து நோயாளிகளுக்கு ஏற்றும் ''சேலைன்'' குளுக்கோஸைத் தயாரிக்கும் திட்டமும் செயற்படுத்தப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். (உ-3)

## சீமெந்து ஆலையை மூடுவது மேலும் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 2

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மூடும் விவகாரம் மேலும் பிற்போடப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீமெந்துத் தொழிற்சாலையை கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் திகதியுடன் மூடுவதற்கு முன்னர் முடிவெடுக்கப்பட்டதும். —

பின்னர் ஜனவரி 15 ஆம் திகதிக்கு அது பின் போடப்பட்டதும் — தெரிந்தவையே:

சீமெந்து தொழிற்சாலை மூடப்படும் பட்சத்தில் வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு நியாயமான நட்டஈட்டைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரேயுடன் பேச்சு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கு பகுதியிலிருந்து நேற்று ஐவர் விடுவிப்பு

### 4 பேர் வயோதிபர்; ஒருவர் இளம் பெண்

வலி.வடக்கில் — இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் - இருந்து ஒரு வயோதிபத் தம்பதி உட்பட 5 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

பெரியவிளான் திருக்கன்வியர் மடத்தைச் சேர்ந்த (கொன்வென்ற்) செல்வி ஜெயசீலி மரியதாஸ் (24 வயது), தையிட்டியைச் சேர்ந்த நன்னிப்பிள்ளை பொன்னம்பலம் (72 வயது). இவரின் மனைவி பொன்னம்பலம் முத்தாச்சி (70 வயது), இளவாலை முள்ளானையைச் சேர்ந்த வல்லிபுரம் கணபதிப்பிள்ளை (85 வயது), மாதகலைச் சேர்ந்த கந்தையா சிதம்பரப்பிள்ளை (68 வயது) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் காங்கேசன்துறையிலிருந்து கோமாரி கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறை வந்து சேர்ந்தனர். (உ-173)

## காமினியின் படத்தை திரையிட இடைக்கால தடை

கொழும்பு, பெப். 2

வடக்கு — கிழக்கு யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ''நொமியன மினிசு'' (சாகாத மனிதர்கள்) சிங்களத் திரைப்படத்தை திரையிடுவதற்கு கொழும்பு நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உப சபாநாயகர் காமினி பொன்சேகா இயக்கி, நடித்த இப்படத்தை திரையிடுவதற்கு திரைப்படக் கூட்டுத்தாபனம் முன்னுரிமை வழங்கியதாகத் தெரிவித்து, திரைப்படத்துறை ஊழியர்கள் சார்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

(உ-எ)

## நோயாளர் கப்பல் சேவை: யாழ். அரச அதிபர் முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 2

குடாநாட்டில் இருந்து நோயாளிகளை ஏற்றிச் செல்ல வசதியாக கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தும் முயற்சியில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் முன்னர் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்த 'குமண' கப்பல் மூலம் நோயாளிகள் இங்கிருந்து சிகிச்சைக்காக சென்று திரும்பிவந்தனர். அந்தக் கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அன்பளிப்பாக கிடைத்த

## 'எக்ஸ்றே' இயந்திரம் பயன்படாத நிலையில்!

பிரிட்டிஷ் அரசு யாழ் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்த வைத்திய உபகரணங்களில் ஒன்றான ''எக்ஸ்றே'' கருவி இங்கு வந்து சேர்ந்த போதிலும், அதனால் பயனடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

'எக்ஸ்றே' இயந்திரத்துக்குரிய முக்கிய உதிரிப் பாகங்கள் வந்து சேராமையினாலேயே அதனை பயன்படுத்த முடியவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்

போதனா ஆஸ்பத்திரியின் பாவிப்பில் இருந்த 'எக்ஸ்றே' இயந்திரம் பழுதடைந்ததால் 'எக்ஸ்றே' பிரிவு ஸ்தம்பிதம் அடையும் ஆபத்து ஏற்கனவே உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

2½ போத்தல் பால் எடுக்கும் யமுனாபாரி ஆடு இரண்டும், 20 நாள் சென்ற குட்டிகளும், பொமனேரியன் ஆண் நாய்க்குட்டியும் 6 மாதம் விற்பனைக்குண்டு. கனகசிங்கம் 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (29197)

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: C. மகேசன் 286, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில், யாழ்ப்பாணம். (29216)

கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், கடைத் தளபாடங்கள், தையல் மெஷின், மிட்டாய் வண்டில், யானைச் சோடா வெற்றுப் போத்தல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மலிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மானிப்பாய். (29196)

## இரசாயனவியல்

திரு. மகாதேவா அவர்களின் அசேதன இரசாயனம், பௌதிக இரசாயனம், புவிவளம் ஆகிய நூல்கள் விற்பனைக்குண்டு. சுப்பிரமணிய புத்தகசாலை, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (29203)

## பாலர் ஆசிரியர் பயிற்சி

கடைசித் தகைமை க. பொ. த. (சா/தா) சனி, ஞாயிறு நேரில் கற்கமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (29187)

## இலவச திருமண சேவை

39 வயது, விசாகம், செவ்வாய் 7 யாழ். வங்கியில் கடமையாற்றும் மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. அரச/தனியார் துறை விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (29199)

## திருத்தவேலைகள்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்), யாழ்ப்பாணம், கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7215)

## றோனியோ பிரதி

100 பிரதகள் இருபக்கமும் பிரதிசெய்ய 30 ரூபா, ரைப்பிங் 8 ரூபா, பேபபர் (தரம் I) 60 சதம் மட்டுமே. அறவிடப்படுகிறது. குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கருகில்), யாழ்ப்பாணம் சி-7214)

## தவறிவிட்டது

31 - 01 - 1994 அன்று மூனாய் வீதிக்கும் வழுக்கையாற்றுக்கும் இடையில் ஒரு பவுண் நிறையுள்ள கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் திருமதி பராசக்தி ஞானேஸ்வரன், நாகபுரி, வட்டுக்கோட்டை (29212)

# கிளிநொச்சியில் புறநிலைகற்கை நெறி

யாழ்ப்பாணம், பெப் 2

புறநிலைக் கற்கை நெறி ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வேண்டுதலின் பேரில் கிளிநொச்சி விவசாயபீடத்தில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி முதல் நடைபெற்று வந்தது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பும் பொருளாதாரத்தில் வளங்களை இனங்காணலும் திட்டமிடலும் என்ற பொதுவான தலைப்பில் பல்வேறுபட்ட சிறு தலைப்புகளைக் கொண்ட 55 மணித்தியால விரிவுரைகள் பல்வேறுபட்ட துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. (ஊ-17)

---

தென்னிந்திய திருச்சபை வட்டுக்கோட்டை போாலயம்

# பெண்கள் ஐக்கியம்

தமிழ், ஆங்கிலம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தையல், சமையல் கைவேலை ஆகியவற்றில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் பயிற்சிகள் ஆரம்பமாக இருக்கின்றன. பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பிக்கும் படி கேட்கப்படுகின்றீர்கள். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை பெண்கள் ஐக்கிய செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 02 - 1994

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

செயலாளர்,
வட்டுக்கோட்டை திருச்சபை-
பெண்கள் ஐக்கியம்,
வட்டுக்கோட்டை.

[6934]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L

SAT., SUN CLASSES
(காலை 8 மணி முதல் மாலை 3-00 மணி)

EVENING CLASSES
(மாலை 3-15 மணி முதல் மாலை 6-00 மணி)

DAY CLASSES
(காலை 8-15 மணி முதல் பிற்பகல் 2-00 மணி)

★ திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

[சி-7160]

---

# வேலை வாய்ப்பு

படித்த பணிப்பெண் தேவை

பெரிய வீடொன்றில் (சிறிய குடும்பம்) சமையல் உதவி உட்பட சகல வீட்டுக் கருமங்களும் திறம்படச் செய்யக்கூடிய நேர்மையும் சுத்தமும் மிக்க ஒரு பெண் உடன் தேவை. கல்வித் தரம் G. C. E. (O/L) ஆனால் குறைந்த கல்வியுடையோர், ஆற்றல் அனுபவ அடிப்படையில் கருதப்படுவர்.

வயது: 16 — 40 வரை

அடிப்படைச் சம்பளம்: ரூபா 500/-
நன்னடத்தை ஊதியம்: ரூபா 150/-
செயல்திறன் ஊதியம்: ரூபா 150/- என

மாதத்திற்கு ரூபா 800/- வரை கொடுக்கப்படும். ஓரிரு வருடங்களின் பின் சிங்கப்பூரில் பணிபுரிய வாய்ப்பும் உண்டு. சான்றிதழ் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும்.

S. K. குலசேகரம்,
(ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்)
டச்றோட், மீசாலை.
(விக்னேஸ்வரா பாடசாலை முன்பாக)

[29218]

---

# தனியார் கல்வி நிலைய ஒன்றியம்

தென்மராட்சி

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் - 1994

காலம்: 02 02-1994 புதன்கிழமை பிற்பகல் 3மணி

இடம்: யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

நிகழ்ச்சி நிரல்

1. மௌனாஞ்சலி
2. தலைவர் உரை
3. செயலாளர் ஆண்டறிக்கை
4. பொருளாளர் கணக்கறிக்கை
5. புதிய நிர்வாகசபை தெரிவு
6. அங்கத்தவர் குறிப்புரை

முக்கிய குறிப்பு:

★ மேற்படி கூட்டத்தில் தங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள சந்தா நிலுவையைப் பொருளாளரிடம் செலுத்தி 1994 ஆம் ஆண்டுக்கான "புதிய ஒழுங்கு விதிப் படிவங்களை" பெற்றுக் கொள்ளவும்.

★ 1994 ஆம் ஆண்டுக்கான புதிய நேர அட்டவணைகளை வகுப்பு ரீதியாகச் சமர்ப்பித்து-புதிய நிர்வாக சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவும்

தயவு செய்து மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

த. நாகேஸ்வரன், தலைவர்.
க. தர்மராஜா, செயலாளர்.
ந. சிவானந்தன், பொருளாளர்.

நிர்வாகக் குழு:

ச. கிருஷ்ணன் — த. பரமேஸ்வரன்
சோ. முரளி — செ. சுதாகரன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
மாணவர் அமைப்பு காரியாலயம்,
தென்மராட்சி.

[6931]

---

ROTARACT CLUB

# எஸ் எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில யாழ். றோட்டரக்ற் கழகம் நடத்தும் மாபெரும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள்

மேற்படி போட்டிகளில்,

✻ ரெனிஸ் (TENNIS)

2 - 2 - 1994 முதல் ஆரம்பமாகவுள்ளது.

காலம்: பெப்ரவரி 2. 3. 4. 5. 7. 8. 9.

நேரம்: பெப்ரவரி 2ஆம், 3ஆம், 7ஆம் 8ஆம், 9ஆம் திகதிகளில் மாலை 2-30 — 5-30
பெப்ரவரி 4ஆம், 5ஆம் திகதிகளில் காலை 7-30 — மதியம் 12-30 மாலை 2-30 — 5-30

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

✻ சதுரங்கம் (CHESS)

காலம்: பெப்ரவரி 4, 5, 6

நேரம்: பெப்ரவரி 4ஆம் திகதி மதியம் 12-00 — மாலை 5-30
பெப்ரவரி 5ஆம், 6ஆம் திகதிகளில் - காலை 8-30 — மாலை 5-30

இடம்: கலைப்பீட மாணவர் பொது அறை - யாழ்/பல்கலைக்கழகம்

குறிப்பு: சதுரங்கப் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் சதுரங்கப்பலகையுடன் 4-2-94 மதியம் 12 மணிக்கு மேற்குறிப்பிட்ட இடத்திற்கு சமுகமளிக்கவும்.

— செயல் திட்டப்பொறுப்பாளர்.

(29219)

---

# நன்றி நவிலல்

27-01-1994 ஆம் திகதி வியாழக்கிழமையன்று நடந்த எமது திருமண வைபவத்திற்கு வருகை தந்து, அன்பளிப்பு, ஆசீர்வாதம், அளித்த அனைவருக்கும், எங்கள் இருவர் சார்பிலும், எங்கள் குடும்பத்தினர் சார்பிலும், உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

வைத்திய கலாநிதி. க. சிவநேசன்,
திருமதி ஜெயகௌரி சிவநேசன்.

"சிவஸ்தான்", "தணிகை",
நல்லூர் — யாழ்ப்பாணம்.

[29222]

---

# ஈராண்டு நினைவலைகள்



அமரர்

## பொன்னையா இராமுப்பிள்ளை

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

நெஞ்சம்குளிர: 12 — 07 — 1935
நெஞ்சம்வேக: 26 — 01 — 1992

திதி: 02 - 02 - 1994

ஆருயிர் தெய்வமே! அன்பின் அப்பாவே!

உங்கள் அன்பு முகம் காணத் தவிக்கும் எங்களை இவ் இளவயதில் விட்டுவிட்டு ஏனப்பா சென்றீர்கள்?

எங்களிற்கு எதுவித குறையுமின்றி நீங்கள் வளர்த்தீர்களே! "கல்வியே கண்" எனக்கூறி நற்கல்வி புகட்டி நல்வழி காட்டினீர்களே! அப்பா எங்கள் வாழ்வு பூராகவும் உங்களின் துணை இருக்கும் என்று நாம கனவு காண, நெஞ்சம் வேக நீங்கள் சென்றீர்களே! அப்பா உங்களின் உடல்தான் எம்மருகில் இல்லை. ஆனால் எங்கள் அனைவரின் நெஞ்சங்களில் நிதமும் நீங்கள் வாழ்கின்றீர்கள்! உங்களோடு நாம் வாழ்ந்த அந்த இனிய நாட்களின் நினைவில் எம்மீதி வாழ்வு தொடரும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகனை இறைஞ்சும்!
குடும்பத்தினர்.

"அம்பிகை வாசா"
கைதடி கிழக்கு,
கைதடி.

[29158]

---

# பிறந்தநாள் வாழ்த்து

## அ. ஜெயகுமரன்

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த அ. ஜெயகுமரன் 21 ஆவது பிறந்தநாளை இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, தாத்தா, அம்மம்மா, நண்பர்கள் வாழ்த்துகிறார்கள்.

(6791) நண்பர்கள்.

---

# நன்றி கூறுகின்றோம்

1993 மார்கழித்திங்கள் 28 ஆம் நாள் அமரத்துவம் அடைந்த திருமதி வசந்தாதேவி சபாநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகளின் போது பங்கு பற்றியவர்கள்; அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள்; மலர் வளையங்கள் வைத்தவர்கள்; கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டவர்கள்; பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொண்டவர்கள்; இரங்கல் உரை நிகழ்த்தியவர்கள் ஆகியோருக்கும் 31 ஆம் நாள் ஆத்மசாந்திக் கிரியைகளின் போது கலந்து கொண்டவர்கள்; அஞ்சல் மூலம் ஆறுதல் கூறியவர்கள்; பத்திரிகைகள் மூலம் நினைவஞ்சலியினை வெளியிட்டவர்கள்; நினைவுமலர் அச்சிட்டு வெளியிட்டவர்கள்; அதற்கு அனுதாபச் செய்திகளை வழங்கியவர்கள்; பொதுஸ்தாபனங்களில் நிழற்படங்களை திரைநீக்கம் செய்தவர்கள்; மலரஞ்சலி செலுத்தியவர்கள்; உருவப்படத்தினை தாங்கிய நினைவு வாய்பாட்டு அட்டையினை பிரசுரித்து வெளியிட்டவர்கள்; உருவப்படம் தாங்கிய கலண்டர்களை அச்சிட்டு வெளியிட்டவர்கள் அந் நிகழ்வின்போது நினைவஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள்; செய்திகளை வாசித்தவர்கள்; எமது நினைவு மலரை இயற்றி இசைத்தவர் ஆகியோருக்கும் 83 ஆம் நாள் நினைவஞ்சலியினை பத்திரிகையில் பிரசுரித்து அஞ்சலிக் கூட்டத்தினை நிகழ்த்தி நிழற்படத்தினை திரைநீக்கம் செய்தவர்கள்; அந் நிகழ்வில் நினைவுப் பேருரை நிகழ்த்தியவர்கள்; கலந்து கொண்டோருக்கும்.

அன்னார் திடீரென நோய்வாய்ப்பட்டதில் இருந்து எமது துன்பத்தில் இரண்டறக் கலந்து வேதனைப்படும் எமது உற்றார், உறவினர், நண்பர் அனைவருக்கும் மற்றும் வேண்டிய உதவியைப் புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


கணவன்: பிள்ளைகள்:
தாய்; சகோதரர்.

கைதடி நாவற்குழி,
கைதடி.

(29223)

---

# நீங்காத நினைவில் 5ஆம் ஆண்டு



## தனபாலசிங்கம் சத்தியேந்திரா

[மருத்துவபீடம் - யாழ். பல்கலைக்கழகம்]

மலர்வு: 07 - 11 - 1965
உதிர்வு: 02 - 02 - 1989

சத்தியேந்திரா
இந்திய வல்லாதிக்கத்தின்
ஆக்கிரமிப்பு அகல் வாய்க்குள்
அஸ்தமித்துப் போன
இளஞ்சூரியன்
மனிதத்தைத் தொலைத்துவிட்ட
மனிதர்களுக்குள்
மனிதம் நிறைந்த
மனிதனாய், உலாவியவன்
ஆழ் மனதில்
ஆறாத ரணமாய்
வலித்துக் கொண்டிருப்பவன்.

உங்கள் பிரிவால் வாடும்:

பெற்றோர், சகோதரர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

561/, கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(29208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மிகப் பெரும் சுத்துமாத்து!

மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்காக ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்க இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இதுவரை இடம்பெற்ற, இப்போது இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மூவரைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதாம்.

ஆணைக்குழுவை நியமிக்காமலே அது சம்பந்தமான தகவலை அவசர அவசரமாக அரசு வெளியிடுவதில் ஓர் உள்ளார்ந்த நோக்கம் இருக்க வேண்டும் என்பதனை எவரும் இலகுவில் ஊகிக்கலாம். உண்மையும் அதுதான்.

அரசாங்கப் படைகளும், அரசின் படுகொலைக் குழுக்களும் நடத்திய மனித வேட்டை வெறியாட்டம் வெளிச்சத்துக்கு வந்துள்ள வேளை பார்த்து—

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் குழுவின் கூட்டம் ஜனவரி 31ஆம்திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகி உள்ளது அங்கு சூரியகந்தச் சூடு வெப்பம் கொடுத்து ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான நெருப்புப் பிடிக்காமல் தடுப்பதற்காகத் தண்ணீர் ஊற்றும் ஏற்பாடே இது.

சர்வதேச அரங்குகளில் தனக்கு எதிரான கருத்துக்கள் அல்லது அபகீர்த்தி வரப் போவதுதெரிந்தால் இவ்வாறு உஷார் அடைவது ஸ்ரீலங்கா அரசின் வழக்கம்.

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு கடன் வழங்குவதுடன் மனித உரிமை மீறல்களை மேற்குநாடுகள் சம்பந்தப்படுத்திய காலத்தில் இருந்து, ஸ்ரீலங்கா அரசாங்கம் செய்யக்கூடிய அக்கிரமங்களை எல்லாம் செய்துவிட்டு, தான் பெரிய சாது என்று வெகு சாதுரியமாக நடித்து வருகிறது.

கடந்த வருடமும் இதே மாதிரியான ஓர் காட்சியை நடித்துக் காட்டியதும், அமெரிக்கா உட்பட வெள்ளைக்காரர் நாடுகள் அதனை மெத்த ரசித்து சான்றிதழ் வழங்கியதும் நினைவுபடுத்தக் கூடிய ஒன்றாகும். ஸ்ரீலங்கா மனித உரிமைகளைப் பேணுவதில் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதே அந்தச் சான்றிதழாகும்.

இத்தகைய சான்றிதழ்களைப் பல தடவைகள் பெற்ற உற்சாகத்திலேயே இம் முறையும் தனது கைவந்த கலையை ஸ்ரீலங்கா அரசு மீண்டும் மேடையேற்றுகிறது. மனித உரிமை மீறல்களை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப் போவதாக வெறும் அறிவித்தல் ஒன்றைச் செய்திருக்கிறது.

மனித உரிமைகளை எந்தளவு மோசமாக மீறமுடியுமோ அந்தளவுக்கு அக்கிரமம்புரிந்துவிட்டு, அவை குறித்து விசாரித்து என்ன பயன்? மனித உரிமைகள் விடயத்தில் இதுவரை ஸ்ரீலங்கா போட்ட வேடங்களைப் பார்த்த வெளிநாடுகளால், மனித உரிமைகளை மீறாதிருக்க கண்டிப்பான, காத்திரமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறு வற்புறுத்த முடியாது போனது ஏன்? உண்மையில் இது விடயத்தில் அந்த நாடுகளும் ஸ்ரீலங்காவுடன் சேர்ந்து விளையாடுகின்றன. இதனைத் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் உணரும் காலம் வந்துவிட்டது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் 1956ஆம் ஆண்டிலிருந்தே அவர்களின் அடிப்படை உரிமைகள் ஸ்ரீலங்கா அரசால் மீறப்பட்டு வந்தன. இப்போது அவர்களின் வாழ்வுரிமைகளும் பறித்தெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் உலகம் இதனைக் கண்டு கொள்வதாக இல்லை. அவ்வாறு பொருட்படுத்தியிருந்தால் மனித உரிமைகளை மீறும் படையினரை, அரச அதிகாரிகளை தண்டிக்க சட்டம் கொண்டு வருமாறு கொழும்பு அரசுக்கு அழுத்தம் போட்டிருக்க வேண்டுமே!

மொத்தத்தில் மனித உரிமைகள் விவகாரத்தில் மேலை நாடுகள் ஸ்ரீலங்காவுடன் சேர்ந்து மிகப்பெரும் ''சுத்துமாத்துப்'' பண்ணுகின்றன என்பதே யதார்த்த நிலை!

# சட்டக்கல்லூரிக்கு கடந்த ஆண்டு ஏழு தமிழர்கள் மட்டுமே அனுமதி

## பாரபட்சம் என ஜனாதிபதிக்கு முறையீடு

கொழும்பு, பெப். 2

இலங்கைச் சட்டக் கல்லூரியில் மாணவர்களை அனுமதிப்பது இனவிகிதாசாரப் படி இடம்பெறுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, சுயேச்சை அமைப்பு ஒன்றினால் நிர்வகிக்கப்பட்டுவரும் சட்டக் கல்லூரியில், தற்போது இனவிகிதாசாரப் படியே மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு வருவதாக வவுனியா பிரஜைகள் குழுத் தலைவர் என். எம். எக்ஸ். சொர்ணபால ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் நடத்தப்பட்ட சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி 230 சிங்களவர்களும் 7 தமிழர்களும், 8 முஸ்லிம்களும் சட்டக்கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களம் நடத்தும் பிரவேசப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில்தான் சட்டக் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்ற வாதம் முன்வைக்கப்படும் பட்சத்தில் —

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு பாடங்களிலும் பெற்ற புள்ளிகளை பகிரங்கப்படுத்த வேண்டும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் பகிரங்கமாக வெளியிடப்படும் நடைமுறையை இதிலும் கையாள வேண்டும்.

மருத்துவம், பொறியியல் ஆகிய கல்வித்துறைகளைப் போல் அல்லாது—

சட்டம் பயிலும் அனைவருக்கும் தொழில் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு இல்லை. சட்டத்தரணிகள் தொழில் பெறுவதற்குப் பல வாய்ப்புகள் உள்ளன.

கடந்த இரண்டு தசாப்தங்களாக சட்டக் கல்லூரியில் தமிழ், சிங்கள மொழிகளில் சமாந்தரமாக மாணவர்களுக்கு போதனை நடத்தப்பட்டு வந்துள்ளது. இருமொழிகளிலும் சம எண்ணிக்கையில் போதனாசிரியர்களும் பரீட்சகர்களும் உள்ளனர். இருமொழிகளிலும் 3 ஆண்டு கால போதனையை சமாந்தரமாக நடத்தத் தேவையான இடவசதிகளும் சட்டக் கல்லூரியில் உள்ளன.

சம எண்ணிக்கையிலான சிங்கள, தமிழ் மாணவர்களுக்கு போதனை வழங்க முடியும். ஒவ்வொரு விரிவுரை மண்டபமும் 100 மாணவர்களை கொள்ளக் கூடியதாக இருக்கிறது இப்படி 6 விரிவுரை மண்டபங்கள் உள்ளன.

இப்படி இருக்கையில் சட்டக் கல்லூரியில் தமிழ்மொழி மூலமான போதனைக்கு 15 மாணவரை மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதேன்?—

இவ்வாறு திரு. சொர்ணபால, ஜனாதிபதியைக் கடித மூலம் கேட்டிருக்கிறார். (இ-எ)

## சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள்

யாழ்ப்பாணம், பெப். 2

சுவாமி விவேகானந்தரின் 132ஆவது பிறந்த நாளை ஒட்டி இன்று புதன்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் விசேட பூஜை, பஜனை, சொற்பொழிவு ஆகியன நடைபெறும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்று காலை 9மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும். (க)

# 2000 ஆவது ஆண்டில் 3,000 புதிய நாடுகள்

## ம. ஐ முன்னணி எம். பி கூறுகிறார்

கொழும்பு, பெப். 2

2000ஆவது ஆண்டில் மூவாயிரம் புதிய நாடுகள் உலகில் இருக்கும் என்று அமெரிக்கா கூறியிருக்கிறது.

மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. பந்துல குணவர்த்தனா கண்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு - கிழக்கில் இடம்பெறுவதை விடுதலைப் போராட்டம் என்று நம்ப, மக்கள் ஐக்கிய முன்னணி தயாராக இல்லை.

வடக்கு - கிழக்கில் இடம்பெறுவது பிரிவினைவாத யுத்தமே.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளுடன் தமிழகத்தையும் சேர்த்து ஈழம் அமைக்க யார் முயற்சிக்கிறார்கள்?

வடக்கு - கிழக்கில் உள்ள இயற்கை வளங்கள் மதிப்பிட முடியாதவை. ஈழம் யுத்தத்தை ஆதரிப்பவர்கள் இந்த வளங்களை சுரண்டும் எண்ணங் கொண்டவர்களாவர்.

தாயகக் கோட்பாட்டில் எமக்கு நம்பிக்கை இல்லை. நாடே அனைவருக்கும் தாயகம்தான்.

வடக்கு - கிழக்கு தமிழரின் தாயகம் என்றால் 72 சதவீதமான சிங்களவருக்கு எது தாயகமாக அமையும்?

மாகாணசபை முறை இந்தியாவினால் திணிக்கப்பட்டதாகும். தேசிய வருமானத்தில் 17 சதவீதம் மாகாண சபைகளை பராமரிக்கவே செலவிடப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-எ)

## புதிய பாடத் திட்ட அறிமுகமும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், பெப் 2

ஆண்டு இரண்டுக்கான புதிய பாடத்திட்ட அறிமுகமும், செயலமர்வும் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை யாழ். கோட்ட ஆசிரியர்களுக்கு யாழ். மத்திய கல்லூரியிலும் —

நல்லூர் கோட்ட ஆசிரியர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

ஆண்டு இரண்டில் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இச் செயலமர்வில் பங்கேற்றுக் கொள்ள வேண்டும் என யாழ். நல்லூர்க் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கேட்டுள்ளார். (இ)

## தமிழர் வெளியேற்றப்பட்டு அவர்கள் வீட்டில் படையினர்

யாழ்ப்பாணம், பெப். 2

திருகோணமலை நகரின் லிங்க நகர்ப் பகுதியில் உள்ள தமிழர்களை வெளியேற்றிவிட்டு அவர்கள் வசித்த வீடுகளை ஸ்ரீலங்காப் படையினர் தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் செயலால் தமிழர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ எ)

# அலம்பில் கூட்டுறவு சங்கம் குமுழமுனைக்கு இடமாற்றம்

## மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், பெப் 2

முல்லைத்தீவு மாவட்டம் அலம்பிலில் இருந்த கூட்டுறவுச் சங்கம் குமுழமுனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் அலம்பில் மக்கள் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பரில் இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலில் அலம்பில் கூட்டுறவுச் சங்கம் சேதமடைந்தது தெரிந்ததே.

அலம்பில் மக்கள் குமுழமுனைக்கு நடந்து சென்று தங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டி உள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. (இ-எ)

## வடக்கு-கிழக்கு யுத்த திரைப்படம்:

# வருமானத்தின் ஒரு பகுதி ராணுவ ஆஸ்பத்திரிக்காம்

கொழும்பு, பெப் 2

வடக்கு-கிழக்கு யுத்தத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட ''நொமியென மினிஸு'' என்ற சிங்களத் திரைப்படம் இம் மாதம் 4ஆம் திகதி திரையிடப்படவுள்ளது.

திரையிடப்பட்ட நாள் முதல் மே மாதம் 4ஆம் திகதி வரை இப்படத்தினால் கிடைக்கும் வருமானத்தின் ஒரு சதவீதத்தை இராணுவ ஆஸ்பத்திரியில் நவீன அறுவைச் சிகிச்சை தியேட்டர் மற்றும் வார்டுகளைக் கட்டுவதற்கான நிதிக்கு வழங்கப் போவதாக படத்தின் தயாரிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-எ)

## மட்டக்களப்பில் சூறாவளி

மட்டக்களப்பு, பெப். 2

மட்டக்களப்பின் காரைதீவுப் பகுதியை கடந்த சனிக்கிழமை சூறாவளி தாக்கியது.

இதனால் பல வீடுகள் சேதமாகின. மரங்கள் வேருடன் சாய்ந்தன.

இதேவேளை - அம்பாறையின் கரையோரப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் 2 அடிக்கு மேல் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. விபுலானந்த பாடசாலை வெள்ளத்தில் மூழ்கி உள்ளது அங்கு தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். (இ-த)

## வதிவிட வேளாண்மை

யாழ்ப்பாணம், பெப் 2

வதிவிட வேளாண்மைப் போட்டி தொடர்பாக 04-01-94 அன்று கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாசாலையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய விவசாய போதனாசிரியர் திருமதி சாந்திகுமார் மருந்தடிக்காத மரக்கறிகளைப் பெற்றிட வதிவிடங்களில் வேளாண்மை செய்யுங்கள் என குறிப்பிட்டார். (க)

## ப. நோ. கூ. சங்கங்கள்

# கொழும்பிலிருந்து பொருள்களை கொண்டு வருவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். மாவட்டத்தில் உள்ள 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நான்கு கோட்டங்களாகப் பிரிந்து கொழும்பிலிருந்து நேரடியாக கப்பல் மூலம் பொருள்களைத் தருவிக்க தீர்மானித்துள்ளன.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் அதன் தலைவர் திரு வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

யாழ் குடாநாட்டில் திடீரென சில பொருள்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை கருத்திற் கொண்டும்—

சங்கங்களுக்கென கொழும்பில் இருந்து கொள்வனவு செய்யப்படும் பொருள்கள் தாமதமடையாது விரைவில் கிடைக்க வழிசெய்வதை நோக்கமாகக் கொண்டும் சங்கங்கள் இவ்வாறு செயற்படத் தீர்மானித்துள்ளன.

இதன்படி வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய நான்கு கோட்டங்களைச் சேர்ந்த குழுவினர் கொழும்பில் நேரடியாக பொருள்கள் கொள்வனவில் ஈடுபடுவர்.

ஏற்கனவே யாழ்ப்பாணம், புங்குடுதீவு வேலணை, மருதங்கேணி, உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வாறு கூடியளவு பொருள்களைக் கொண்டு வந்து தட்டுப்பாடின்றி விநியோகிக்கும் பரீட்சார்த்த முயற்சியில் வெற்றி கண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

# தமிழருக்குப் பிரச்சினை இல்லையென்று ஆஸ்திரேலியாவிலும் தீவிர பிரசாரம்

## அந்நாட்டுக்குப் பயணம் மேற்கொண்ட பேராயர் ஜெபநேசனின் கவலை

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனப் பேராயர் அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆண்டகை கடந்த டிசம்பர் மாதம் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு நாடு திரும்பியுள்ளார்

பேராயர் தமது பயண அனுபவங்கள் குறித்து ''உதயனு''க்கு அளித்த செவ்வியை இங்கே தருகின்றோம்.

கேள்வி: பேராயர் அவர்களே! தாங்கள் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆஸ்திரேலியா சென்றிருந்ததாக அறிந்தோம். என்ன காரணத்துக்காக அங்கு சென்றீர்கள் என்று கூறமுடியுமா?

பதில்: ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ்க் கிறிஸ்தவர்கள், குறிப்பாக எனது ஆதீனத்தைச் சேர்ந்த அன்பர்கள் என்னைச் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும்படி அழைத்தனர். இதனாலேயே நான் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றேன். அங்கு அடிலெய்ட், மெல்போர்ண், பிரிஸ்பேன், கன்பெரா, சிட்னி ஆகிய இடங்களில் உள்ள கிறிஸ்தவக் கோயில்களில் தமிழில் சொற்பொழிவுகள் நிகழ்த்திவிட்டுத் திரும்பினேன்.

கேள்வி: ஆஸ்திரேலிய மக்கள் இலங்கைப் பிரச்சினை குறித்து என்ன கருதுகின்றனர்?

பதில்: எதிர்க்கட்சியில் உள்ள சில செனேட்டர்கள் நமது பிரச்சினையில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தமது நாடாளுமன்றத்தில் எமது மக்களின் துன்பங்கள் குறித்துக் குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால் ஆஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையிலிருந்து சற்று ஒதுங்கி இருக்கவே விரும்புகின்றது போலத் தென்படுகின்றது.

ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழ் மக்கள் அபிமானத்தோடும், பாசத்தோடும் பாடுபட்டு வருகின்றனர் என்பதைக் காணக் கூடியதாக இருந்தது

கேள்வி: ஆஸ்திரேலிய தமிழ் மக்களின் பிள்ளைகளைப் பற்றி அவ்வாறு கூற முடியுமா?

பதில்: பிள்ளைகளைப் பற்றி அப்படிக் கூறமுடியாது. பிள்ளைகள் பலர் தமிழை முற்றாக மறந்து விட்டனர். எனது மருமக்கள் அனைவருமே தமிழை முற்றாக மறந்துவிட்டனர். இதைக் கண்டு நான் வேதனை அடைந்தேன். சைவத் தமிழ் மக்கள் தேவாரம், திருவாசகம் முதலியவற்றைப் படிப்பதற்காக பிள்ளைகளுக்குத் தமிழ்க்கல்வி அளித்து வருகின்றனர். எத்தனை தலைமுறைகளுக்கு நீடிக்கும் என்பதை இப்பொழுது கூறமுடியாதுள்ளது.

கேள்வி: ஆஸ்திரேலியாவில் தமிழ் மக்கள் [illegible] வாய்ப்பு எவ்வாறு உள்ளது?

பதில்: இப்பொழுது வெள்ளைக்கார நாடுகள் அனைத்திலுமே ஒரு மந்தநிலை நிலவுகின்றது. ஆஸ்திரேலியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனாலும் ஆஸ்திரேலிய அரசாங்கம் கொடுக்கின்ற சமூக சேமநலக் கொடுப்பனவைக்



பேராயர் ஜெபநேசன்

கொண்டே எம்மவர் பலர் வீடுகள், கார்கள் ஆகியவற்றை வாங்கியுள்ளனர். ஆனால் இப்பொழுது சரியான 'வீசா' இல்லாமல் சென்றடைபவர்கள் பெரிய கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

கேள்வி: [illegible] வுக்கு சமீபத்தில் சென்ற இலங்கையர் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று எண்ணுகிறீர்களா?

பதில்: சரியான 'வீசா' இல்லாதவர்கள் மீது கெடுபிடி உண்டு. எனினும் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஒன்று நடைபெறுவதால் இரக்கம் காட்டுகின்றனர். ஆஸ்திரேலியாவுக்குள் புகுந்த சகலருக்குமே ஆறு மாத 'வீசா' கிடைக்கின்றது இலங்கையருக்கு அத்துடன் மேலதிகமாக இன்னுமொரு ஆறு மாத 'வீசா' வழங்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய குடியகல்வுத் திணைக்கள [illegible] என்னைத் [illegible] அழைத்து தமிழரின் நிலை பற்றிக் கூறும்படி கேட்டது

அவர்களுடைய நீதிமன்றம் உண்மையான தகவல்களைத் திரட்டுவதில ஆர்வமாய் இருப்பதைக் கண்டுகொண்டேன். அவர்கள் என்னைத் தமது நீதிமன்றத்துக்கு அழைத்து, மிகுந்த அன்போடு இலங்கையில தமிழர் படும் அவதிகளைப் பற்றி விசாரித்தனர்.

ஏனைய பல நாடுகளில் நடப்பது போலவே ஆஸ்திரேலியாவிலும் இலங்கையில் தமிழருக்குப் பிரச்சினை இல்லை என்று ஸ்ரீலங்கா அரசாங்கப் பிரசாரம் நடைபெறுவது வேதனைக்குரியதாகும். இதனால் ஆஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்து குழப்ப நிலையில் உள்ளது.

கேள்வி: ஆஸ்திரேலியாவின் கல்வி முறைகள் எவ்வாறு இருக்கின்றன?

பதில்: அங்குள்ள கல்வி முறைகள் பெரும்பாலும் நமது நாட்டுக் கல்வி முறையையே ஒத்திருக்கின்றன. உயர்தரப் பாடசாலைகளில் 12 ஆம் ஆண்டு வரை படிக்கின்றனர். பின்னர் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை, நமது நாட்டில் இந்தப் பரீட்சையை மூன்று முறை எடுக்கலாம் ஆஸ்திரேலியாவில் ஒரு முறை தான் எடுக்க முடியும்.

அந்த ஒரு பரீட்சையின் அடிப்படையிலே தான் ஒரு பிள்ளையின் வாழ்க்கையே நிர்ணயிக்கப்படுகிறது மிகச் சிறந்தவர்கள் - வைத்தியம் - பின்னர் பொறியியல், பின்னர் பல்வைத்தியம் - இப்படியாகப்

— பரகிநேசன் —

போகிறது. இறுதியில் தாதிப் பெண் பயிற்சி வரைக்கும் மாணவர்கள் தரம் பிரிக்கப்படுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி கிடையாதவர்கள் 'டெக்னிக்' (பல்தொழில்நுட்பக் கல்லூரி) தனியார் கல்லூரி என்பனவற்றை நாடுகின்றனர்.

மருத்துவ தாதிப்பயிற்சிக்கு அனுமதிகிடைத்தால் நம்மவர்கள் ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா? சிறந்ததுறைகளுக்கு அனுமதி கிடையாதவர்கள் பல்கலைக்கழகத்தை மறந்துவிட வேண்டியது தான்.

கேள்வி: ஆஸ்திரேலியாவில் உள்ள நம் நாட்டுப் பிள்ளைகளின் கல்வி நிலை எத்தகையது?

பதில்: தற்பொழுது மாணவர்களாக இருப்பவர்கள் நன்றாகப் படிக்கின்றனர். இலங்கைத் தமிழ் மாணவர் என்றால் 'அதிசூரர்' என்ற எண்ணம் கல்வி உலகில் நிலவுகின்றது. ஆனால் அடுத்த சந்ததியில், சவால்கள் குறைகின்ற பொழுது, பொருள் வளம் பெருகுகின்ற பொழுது பிள்ளைகள் பாடுபட்டுப் படித்து முன்னேறுவார்களா என்பது கேள்விக்குரியது ஆஸ்திரேலிய செல்வம் அவர்களைச் சோம்பேறிகள் ஆக்கிவிடும் என்று அஞ்சுகின்றேன்.

கேள்வி: ஆஸ்திரேலியாவில் வாழ்கின்ற எமது மங்கையரின் வாழ்க்கையைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பதில்: ஆஸ்திரேலியாவில் இலங்கைத் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையாக வாழ்கிறார்கள் இதனால் அவர்கள் தமிழ்ப் பண்பாட்டைப் பேணி வருகின்றனர்.

ஆனால் நமது நாட்டில் நிலவும் சமூகக் கொடுமைகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன. சீதனம், அந்தஸ்து, உத்தியோகம் என்பன எமது பெண்களின் திருமண வாழ்க்கையை ஆஸ்திரேலியாவிலும் பாதிக்கின்றன. எவ்வளவு தான் படித்தவர்களாக இருந்தாலும் பெண்கள் பலர் சீதனம் இல்லாத காரணத்தால் மணவாழ்வின்றி அங்கும் உள்ளனர்.

எனவே வெள்ளைக்காரர் கலாசாரத்தின் சிறப்பான அம்சங்களும் எம்மவரைப் பாதிக்கவில்லை. கெடுதலான அம்சங்களும் எம்மவரைப் பாதிக்கவில்லை என்றே கூறலாம்.

கேள்வி: செல்வம் கொழிக்கும் ஆஸ்திரேலியாவில் தங்கிவிடத் தங்களுக்கு மனம் வரவில்லையா?

பதில்: நான் ஆஸ்திரேலிய செல்வத்தில் என்றுமே நாட்டம் கொண்டதில்லை ஆன்மீக வளர்ச்சிக்கு தென்னாசியாவைவிட வேறு எந்தப் பிரதேசமும் உகந்ததாய் இருக்கமாட்டாது. (இ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாக பாரிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தது.

கிழக்கின் தேர்தலை முறியடிக்கும் நோக்கில் விடுதலைப் புலிப் போராளிகள் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி நகர்வதாக உளவு ஸ்தாபனங்கள் தெரிவிப்பதாக இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

விடுதலைப் புலிகள் கடந்த ஆண்டு நடத்திய தாக்குதல்களில் பல வெற்றிகளைக் கண்டுள்ள போதிலும் கிழக்கில் இயல்பு வாழ்க்கையை மீட்பதில் இராணுவம் வென்றுள்ளது என்று இராணுவத்தினர் கூறுவதாக வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது.

(உ-த)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு பூரணம்

கட்டுவனை பிறப்பிடமாகவும், உடுவிலில் வசித்தவருமாகிய பூரணம் 1-2-1994 அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் இ. போ. ச. சாரதி முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வாமதேவன் (தேவன் - மட்டக்களப்பு), மகேஸ்வரி, தனபாலசிங்கம் (தனபாலு-திருமலை), நகுலேஸ்வரி (கொழும்பு), இராசசிங்கம் (கண்ணன் – இ. போ. ச. ஊழியர், காரைநகர்), பரமேஸ்வரி (கனடா), மங்களேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகேந்திரம், காலஞ்சென்ற இ. போ. ச. சாரதி சந்தசாமி, புஸ்பவதி (மட்டக்களப்பு), இலட்சுமி (திருமலை), சுபத்திராதேவி, அல்பேட் பாலசிங்கம், அரியகுலநாதன் (கனடா) ஆகியோரின் அருமை மாமியும், கிருபாகரன் (பிரான்ஸ்), நரேந்திரன் (நோர்வே), யசோ (கனடா), ஜல ஜாரவி (திருமலை), சுபத்திரா யோகேந்திரன் (ஜேர்மனி), பாமதி ஞானசுதன், கலைவாணி (கனடா), வான்மதி (மட்டக்களப்பு), சுதர்சன், சுகன்யா, நிரோஷி, நிதியா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் தற்போது இருக்கும் உடுவில் இல்லத்தில் இன்று (2-2–1994) புதன் கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலிமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
மு. இராசசிங்கம் (கண்ணன்)
(மகன்)

1ஆம் கட்டை,
மானிப்பாய் வீதி,
உடுவில்.

(29217)

### திருமதி புஷ்பகாந்தி காசிநாதன்

மானிப்பாய் உடுவில் வீதி, பக்கஸ் ஒழுங்கையில் வசித்தவராகிய திருமதி புஷ்பகாந்தி காசிநாதன் 28-01–1994 இல் சிவபதமடைந்து விட்டார்.

இவர் திரு. ச. அ. காசிநாதன் அவர்களின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரன், இரவீந்திரன், இரத்தினேஸ்வரன், கஜேந்திரன், ஈஸ்வரி, உமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மினி, மல்லிகாதேவி, சிவகுமாரன், நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியதர்சனி, சசிக்குமார், கேதீஸ்வரன், நிரோசன், தேவதயாளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சம்பந்தன், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (3-2-1994) வியாழக்கிழமை பி. ப –2.00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச அ காசிநாதன்,
(கணவன்)

பக்கஸ் ஒழுங்கை,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

(29211)

### சண்முகம்பிள்ளை செல்வராசா

[ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்]

74/2 சட்டநாதர் வீதி நல்லூரைச் சேர்ந்த ச செல்வராசா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை, இராசம்மா ஆகியோரது மகனும், மனோன்மணியின் [ஓய்வு பெற்ற ஆசிரியை) கணவரும், உமாகாந்தனின் [இலண்டன்] தந்தையும், ரஞ்சினியின் மாமனாரும், தர்ஷன், தர்ஷினி ஆகியோரது பேரனும், காலஞ்சென்ற செல்வநாயகம், தர்மராசா, செந்தில்மதி, பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மகேஸ்வரி [கனடா] நகுலேஸ்வரி [ஆசிரியை மங்கையர்க்கரசி வித்தியாலயம்), இராமச்சந்திரன் [இலண்டன்] ஆகியோரது சகோதரனும், சிவக்கொழுந்து, சிவபாக்கியம், சண்முகசுந்தரம், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் [ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 02 – 02 – 94 இன்று காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

[29224]

### வி. கே. மார்க்கண்டன்

(ஓய்வுபெற்ற கணக்காளர்)

மாகியம்பதியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மார்க்கண்டன் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் தவமணியின் அன்புக் கணவரும், தேவமனோகரி (ஆசிரியை), தேவமனோகரன், மதியழகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மநாதன் (ஆசிரியர்) திருமதி மனோகரன், ரூபி ஆகியோரின் மாமனாரும், ஸ்ரீபன் ராஜ் அவர்களின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கொழும்பில் இடம்பெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
V.S. பத்மதயாளன்

தேவா இல்லம்,
மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(6792)

## வசந்த நாகபூஷணி மகோற்சவம்

ஏழாலை தெற்கு வசந்தபுரம் வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன் கிழமை ஆரம்பமாகிறது.

இம்மாதம் 11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் கிழமை நாட்களில் திரு. க. குமாரசாமியும், சனி, ஞாயிறு நாட்களில் திரு. த. சிவகுமாரனும் சமயச் சொற் பொழிவுகள் ஆற்றுவர். (அ)


UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

**FACULTY OF MEDICINE**

The clinical appointments to all students of the 13 th (Batch (**1990** / **91** batch) will commence on 14-2-1994

- REGISTRAR.

(C-7165)



**ECALOM**
கல்வி நிறுவனம்
(மனோகராச் சந்தி)
நாவலர் வீதி
யாழ்ப்பணம்

**A/L 94. 95**

தமிழ்
இந்து நாகரிகம்
ஆசிரியர்:

காரை.
எஸ் செங்கா

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

★ வாரத்தில் 3 மணி நேரம் வகுப்புகள் நடைபெறும்.
★ வினா விடை வகுப்புகள் முற்றிலும் இலவசம்.
★ அனுமதிகளுக்கு முந்துங்கள்.

(சி-7216)


## இன்று

யாழ். றோட்டரக்ட் கழகம் வருடாந்தம் நடத்தும் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான பொது அறிவுப் போட்டி இன்று தென்மராட்சிப் பிரிவில் நடைபெறும்.

★ ★ ★

அரியாலை 75 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்டபவள விழாவையொட்டிய நிகழ்ச்சித் தொடரில் கலைத்துறை தொடர்பான போட்டிகள் இன்று முதல் நடைபெறவுள்ளன.

முதல் போட்டியாக தனியாள் நடனப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெறும். (த-5)

★ ★ ★

யாழ். பல்கலைக் கழகத்தின் புவியியற் கழகம் நடத்தி வரும் தொடர் கருத்தரங்கின் மற்றுமோர் தொடர் இன்று பிற்பகல் 3 மணிக்கு புவியியற்றுறை விரிவுரை மண்டபம் இலக்கம் 2 இல் நடைபெறும்.

''இந்து சமுத்திர விருத்தியும் இலங்கையின் தோற்றமும்'' என்ற தலைப்பில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் கருத்துரை வழங்குவார். (த)

## விளையாட்டு நிகழ்வுகள்

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ். றோட்டரக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 5.30 மணி வரை யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவர் பொது அறையில் கரம் போட்டிகள் நடைபெறும். (த)


சமூகக்கல்வி

M இக்னேசியஸ்
B.A. (Hons)

| | சனி |
|---|---|
| O/L | 10 – 11 |
| Yr. 10 | 11 – 12 |
| | ஞாயிறு |
| | 1 – 2 |
| | 12 – 1 |

ஆரம்பமாகியுள்ளது.

சம்றொக்

யாழ். சுண்டிக்குளி.

(29221)



மானிப்பாய் கோவிற்பற்று வர்த்தகர் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 1994

மானிப்பாய் கோவிற்பற்று வர்த்தகர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக உத்தியோகத்தவர் தெரிவும் 1994 ஆம் ஆண்டு மாசி மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி வாசீசர் மண்டபத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் சகல வர்த்தகஸ்தாபனங்களும் நண்பகல் 2 மணியுடன் பூட்டப்பட்டு சகல துறை வர்த்தக உரிமையாளர்களும் நேரில் சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:
மாவட்ட அரசியல் துறை முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்

செயலாளர்

(6933)



அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில்
பிரதமகுரு பிரம்மஸ்ரீ
சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள்
அவர்களின்

## சேவை நலம் பாராட்டு விழா

மேற்படி ஆலய தர்மகர்த்தாக்கள் சபையினரும், தொண்டர் சபையினரும், பொதுமக்களும் இணைந்து குருக்கள் ஐயா அவர்களை **18 – 02 – 1994** ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை **3.00** மணிக்கு அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலில் பாராட்டி கௌரவிக்க தீர்மானித்துள்ளனர்.

இவ்விழா சிறப்புற நடைபெற பொதுமக்கள் தங்களால் இயன்ற பண உதவியை ஆலய செயலகத்தில் **15 – 02 – 1994** ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
மேற்படி விழாச் சபையினர்.

அளவெட்டி.
1-2-94

(6789)


# பிரபாவை விட தொண்டாவின் பயங்கரவாதம் மிக கொடியது!

### சு. கவையும் சாடுகிறார் 'ஹெல உறுமய' எம். பி

கொழும்பு, பெப். 2

பிரபாகரன் வடக்கு - கிழக்கில் நடத்தும் பயங்கரவாதத்திலும் பார்க்க கொடிய பயங்கரவாதத்தை தொண்டமான் மலை நாட்டில் நடத்தி வருகின்றார்.

சுதந்திரக் கட்சியின் ''ஹெல உறுமய'' அணி அமைப்பாளரும் களுத்துறை மாவட்ட எம். பியுமான திலக் கருணாரத்னா ''வெரித்தாஸ்'' வானொலிக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

நான் இனவாதி அல்லன் எந்த இனத்தையும் என்றுமே கண்டித்தவனும் அல்லன்.

இலங்கையில் அனைத்து பிரஜைகளும் சமமான உரிமைகளைப்பெற்று வாழ வேண்டும் என்பதே எனது எண்ணம் எங்கும் எவரும் வாழ உரிமை வேண்டும். இன்று இந்த உரிமைசிங்களவருக்கு இல்லை. சிங்களவர்கள் வடக்கு - கிழக்கில் வாழ முடியாதிருக்கிறது. முஸ்லிம்களும் அவ்வாறே உள்ளனர்.

தொண்டமானின் நடவடிக்கையினால் மலைநாட்டிலும் சிங்களவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகள் அருகிவருகின்றன. இவ்வாறு இருக்கையில் நான் எவ்வாறு இனவாதியாக முடியும்? உண்மையில் யார் இனவாதி என்பதை மக்கள் உணர்வார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கு, சிறுபான்மையினரின் வாக்குகள் அத்தியாவசியம் என்ற கருத்தை ஜே. ஆர். பிரேமதாஸா போன்ற தலைவர்கள் அசையா நம்பிக்கையுடன் கொண்டிருந்தனர். அதனைப் பெறுவதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

இதனால் முன்னர் பிரிட்டிஷார் சிங்களவர்களிடம் இருந்து பறித்தெடுத்த காணிகளை இன்று தொண்டமான் 150 ஆண்டுகளுக்குள் வந்து சேர்ந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறார்.

ஆகவே பிரபாகரன் வடக்கு - கிழக்கில் நடத்தும் பயங்கரவாதத்திலும் பார்க்கக் கொடிய பயங்கரவாதத்தை மலைநாட்டில் தொண்டமான் நடத்த வருகின்றார் — என்றார்.

ஆரம்பத்தில் சிங்களவர்களுக்காக அமைக்கப்பட்ட சுதந்திரக்கட்சி, சிங்களவர்களின் உரிமைகளை மறந்து சர்வ அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதிப் பதவியைப் பெறுவதற்காக சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற நடவடிக்கை எடுத்து வருகின்றது. என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-6)

## மூன்று ஆண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ரங்களை பாதுகாப்பு அமைச்சு வெளியிடவில்லை.

1993 நவம்பர் 11 ஆம் திகதியை அடுத்து இடம் பெற்ற பூநகரித் தாக்குதலில் சுமார் ஆயிரம் படையினரை அரசு இழந்தது.

நவம்பர் 11 ஆம் திகதி வரையான இழப்புப் பற்றிய தகவலையே பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருப்பதால் பூநகரி இழப்பும் அதில் சேர்க்கப்படவில்லை எனக் கருதப்படுகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 5 ஆயிரத்துக்கும் மேல் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இழப்புகளுக்கு மத்தியில் இராணுவம் குடாநாட்டில் காங்கேசன்துறை, தீவுப் பகுதிகள் மற்றும் பலாலியை சுற்றியுள்ள பிரதேசங்களை மட்டுமே தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனையிறவு, பூநகரி, கௌதாரி முனை, பகுதிகளையும்—

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகர்ப்பகுதியையும், கொக்கிளாய் பகுதியையும் —

மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார், தள்ளாடி, வங்காலை மன்னார் ஆகிய பகுதிகளையும் மட்டுமே தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வருடகாலத்தில் அம் மாவட்டத்தின் 854 சதுர மைல் பரப்பில் 81 சதுரமைல் பரப்பளவை மட்டுமே படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

வவுனியாவின் 102 கிராம சேவையாளர் பிரிவில் 49 பிரிவுகளில் மட்டும் ஸ்ரீலங்கா அரசின் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நகரையும், நகர் சூழ்ந்த பகுதியையும், வாழைச்சேனை, செங்கலடி, கல்முனை, அக்கரைப்பற்று முதலான பகுதிகளையும்—

திருகோணமலை மாவட்டத்தில் நகரையும் நகர் சூழ்ந்த பகுதியையுமே பூரண கட்டுப்பாட்டினுள் இராணுவம் கொண்டு வந்துள்ளது.

எனினும் இந்தக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இடை இடையே இடம்பெறுகின்றன.

1993 நவம்பர் 11 இல் பூநகரி கூட்டுப்படைத் தளம் மீது இடம்பெற்ற தாக்குதலில் படை முகாம்கள் புலிகளால் முற்றாகத் தகர்க்கப்பட்டன. அரசு 600 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட ஆயுதங்களை இழந்தது அரச தரப்பு 650 படையினர் கொல்லப்பட்டதாக ஒப்புக்கொண்டாலும் ஆயிரம் படையினர் காணாமல் போயினர் எனத் தெரிய வருகின்றது.

அத்துடன் ஏற்கனவே கைப்பற்றிய பூநகரியையும் இழந்து கௌதாரிமுனைக்கு படையினர் திரும்பியதாக அச் சஞ்சிகை மேலும் தெரிவித்தது.

கடந்த ஆண்டில் மட்டும் 8 ஆயிரத்துக்கும் அதிக படையினர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளதாகவும் —

இராணுவத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் பெரிய எடுப்பில் மேற்கொள்ளப்பட்டும் அவை கைகூடவில்லை என்றும் —

தொடரும் யுத்தம் வருடாந்தம் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய்களை விழுங்குவதாகவும்—

இது இலங்கையின் ஆண்டொன்றிற்கான மொத்த செலவீட்டின் 12 சதவீதமாகும் என்றும் அச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

[உ-த]

### சூரியகந்த விவகாரம்:

## புதைகுழியை தோண்டுவதா? தீர்ப்பு ஒத்திவைப்பு!

கொழும்பு, பெப். 2

சூரியகந்தவில் கண்டு பிடிக்கப்பட்ட புதைகுழிகளை தொடர்ந்து தோண்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கோரும் மனு மீது தீர்ப்பு வழங்குவதை எம்பிலிப்பிட்டிய நீதிவான் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இம்மனு மீது நேற்று தீர்ப்பு வழங்குவதாக நீதிவான் முன்னர் அறிவித்திருந்தார்.

அதன்படி எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் இவ்வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, சட்டமா அதிபர் திணைக்களமோ, இரகசியப் பொலீஸாரோ புதைகுழிகளைத் தோண்டும் பணியை மீள ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுப்பின் தான் அது பற்றி கட்டளை பிறப்பிக்கத் தயாராக இருப்பதாக நீதிவான் தெரிவித்தார்.

## நோயாளர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பல் சேவையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நிறுத்தியதைத் தொடர்ந்து சிகிச்சைக்காக நோயாளிகள் கப்பல் மூலம் செல்வது தடைப்பட்டுள்ளது.

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் இது தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் பிரிவினருடனும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தி கப்பல் ஒன்றை நோயாளிகள் பயண சேவையில் ஈடுபடுத்த முயற்சி எடுத்து வருகிறார். கொழும்பில் இருந்து கிடைத்த செய்தி ஒன்று இத்தகவலைத் தெரிவித்தது. (த-5)

## கைதிகளை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அமைத்துள்ளனர்.

காணாமற்போன தமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தரும்படி இச்சங்கத்தினர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

சங்கத்தின் தலைவரான உபாலி விமலவீர இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த மகஜரில் இரண்டு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதில் ஒரு ஆலோசனையே கைதிகள் பரிமாற்றம் பற்றியதாகும்.

மற்றைய ஆலோசனைப் படி —

தற்போது வடக்கில் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படையினர் மற்றும் பொலீஸாரின் பெயர்ப்பட்டியலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திலிருந்து பெற்று, அதனை அவரவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்குப் பிரதியுபகாரமாக ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல தமிழ் கைதிகளினதும் உண்மையான விவரங்கள் அடங்கிய பட்டியலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## நாளை

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழன் பிற்பகல் 2 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள யூனியன் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. . துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

## சிமெந்து ஆலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடத்துவதற்கு சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் குழு ஒன்று கொழும்பு சென்றிருந்தது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அமைச்சர் ஈடுபட்டு வருவதால் அவரைச் சந்திக்க முடியாத நிலையில் இக்குழுவினர் திரும்பியுள்ளனர்.

வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு சிமெந்து கூட்டுஸ்தாபனத்தால் உத்தேசிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை போதுமானதாக இல்லை என்று இக்குழுவினர் தொழில் அமைச்சுக்கு கடிதம் அனுப்பியிருந்ததாகவும்—

தொழில் அமைச்சின் சிபார்சை அடுத்து நட்டஈட்டுத் தொகையை அதிகரிப்பது குறித்து சிமெந்து கூட்டுத்தாபன தலைமையலுவலகம் ஆராய்ந்து வருவதாகவும் தொழிற்சங்க பிரமுகர் ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார். (உ-3)

## சர்வதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ராக இருப்பதாக தம்மிடம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

யாழ். குடாநாட்டுக்கு வருவதற்கு பாதுகாப்பான பாதை ஒன்று இல்லை என்ற காரணத்தைக் காட்டி அரசு அவர்களுக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டதாக அவர் மேலும் கூறினார் (உ-3)

## வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருந்தார் என்றும் —

பிக்குகள் அவருடன் வருகின்றனரா என்பது குறித்து நேற்று வரை இங்கு தகவல் கிடைக்கவில்லை என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய நிலை ... பெறத்தக்க வகையில் உருப்படியான நடவடிக்கைகள் சிலவற்றை அரசுடன் கலந்தாலோசித்த பின்னரே ஆயர் இங்கு வருவதாகத் தெரிய வந்தது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஆயர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.

(உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இல் உள்ள அச்சகத்தில் 02-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org